தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 5, வெள்ளிக்கிழமை

சித்திரை 22, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு".

எப்பொருளை யார் யார் வாயிலாகக் கேட்டாலும் கேட்டவாறே கொள்ளாமல், அப்பொருளின் உண்மைப் பொருளைக் கண்டு அறிவதே அறிவாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆயுள் தண்டனைக் கைதிகள்

209—(*வினா எண். 318) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் ஆயுள் தண்டனை பெற்று சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) கோவை மத்திய சிறையிலுள்ள ஆயுள் கைதிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறைகளில் மொத்தம் 2,994 ஆயுள் தண்டனை சிறைவாசிகளும், அதில் கோவை மத்திய சிறையில் மட்டும் 665 சிறைவாசிகளும் 25–2–1989 தேதி நிலவரப்படி ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன குறிப்பின்படி தமிழ்நாடு முழுவதும் ஆயுள் தண்டனை அனுபவித்து வரக்கூடிய கைதிகளில் எத்தனை பேர் அண்மைக் காலத்தில் தமிழக அரசு போட்ட உத்தரவின் காரணமாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அண்மைக் காலத்திய அரசு உத்தரவின்படி 120 ஆயுள் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுள் கைதிகளில் மிகவும் குறைந்த நிலையிலே 120 பேர்தான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரம்பரை பகை காரணத்தாலேயும், ஜாதி வெறியாலேயும் சொத்து சுகம் ஆகியவற்றாலும், கொலையையே தொழிலாகக் கொண்டவர்களாலும்தான் திட்டமிட்டு கொலைகள் நடைபெற்றிருக்கின்றன, நடைபெற்றும் வருகின்றன. ஆனால் அப்படிப்பட்ட கொலையாளிகளை ஒரு பிரிவாகவும், எதிர்பாராத நிலையிலே சந்தர்ப்பம் ஏற்பட்டு கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டவர்களை ஒரு பிரிவாகவும் அரசு பரிசீலனை செய்து, எதிர்பாராமல் நடந்துவிட்ட கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது பரிவு காட்டி அவர்களை 10 ஆண்டுகளுக்குள் விடுதலை செய்கிற ஒரு ஆலோசனைக்கு அரசு முன் வருமா, அல்லது அது பற்றி ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல அண்மை அரசாங்கத்தின் உத்தரவின்படி 120 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த 120 பேர்களும், 14 ஆண்டுகள் சிறைவாச தண்டனை அனுபவித்தவர்களை விடுதலை செய்யும் உத்தரவின் அடிப்படையில் செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல எண்ணிக்கை அதிகமாகத்தான் இருக்கிறது. சட்ட விதிமுறைகளின் படிதான் அவர்களை விடுதலை செய்யப்பட வேண்டியிருக்கிறது. இதிலே ஒரு குறிப்பை நான் சொல்ல வேண்டும். 1978-வது ஆண்டுக்கு முன்னால் ஆயுள் தண்டனை அடைந்தவர்களைப் பொறுத்து $10\frac{1}{2}$ ஆண்டுக் காலம் கழித்த பின்தான் அவர்களை விடுதலை செய்யலாமா என்று அந்த ஆலோசனைக் குழு பரிசீலித்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்கும். 1978-க்குப் பிறகு நிலைமை என்னவென்று சொன்னால், கிரிமினல் புரொசீஜர் கோடிலே ஏற்படுத்தப்பட்ட ஒரு திருத்தத்தின் காரணமாக 14 ஆண்டுகள் கட்டாயமாக

1989 மே 5]

சிறையிலே இருக்க வேண்டும் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை மனதிலே கொண்டு அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் அனேகமாக—ஏன் அனைவரும்என்றுகூட சொன்னால் தவறு இருக்காது—கொலை கேசிலே சம்பந்தப்பட்ட கைதிகளாகத்தான் இருக்கிறார்கள். அதுபலவிதமான திடும்பிர வேசமான நிலைமைகளில் கூட கொலைகள நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டார். ஆனால் 20 வருஷம் தண்டனை என்ற அந்தக் கருத்து, மேலும் அவர்களுக்கு கொடுக்கும்படியான ரெமிஷன், மாதம் 4 நாட்கள் அவர்களின் கடுமையான உழைப்புக்கு கொடுக்கும்படியான மார்க் முழுவதும் கழித்தால் 14 ஆண்டு. ஆனால், எந்த மெர்சியும் இல்லாமல், எந்தத் தயவும் இல்லாமல் அவர்கள வெளியிலே போக முடியும். ஆகவே அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதைப் பற்றி நான் கேட்க விரும்புவது, அப்படி ரெமிஷன் முழுவதும் கழித்து—அதிலே அவர்கள் 5 ஆண்டு, 7 ஆண்டு ஆகிவிட்டால் ஓவர்சிராக ஆகிறார்கள், கன்விக்ட் வார்டர்களாக ஆகிறார்கள். ஏனென்றால் பல ஆண்டுகளாக நாங்கள அவர்களோடு இருந்தவர்கள். ஆனால், அவர்களுக்கு மார்க் ஜாஸ்தி இருக்கும். 6 மார்க், 7 மார்க் இபபடி வரும். அது போட்டால் அவர்கள் அந்த 14 ஆண்டுகள் கூட இருக்க வேண்டிய தில்லை. இந்த மார்க்குகள் முழுவதும் கழிக்கப்பட்டதற்குப் பிறகு அரசு கருணை காட்டி அவர்களுக்கு 3 ஆண்டுகளோ, 5 ஆண்டுகளோ அவர்களுடைய நிலைமைக்கு ஏற்ப அந்த தண்டனையைக் குறைத்துக் கொடுப்பது என்று சொன்னால 8 வருஷத்திற்கு மேல் 10 வருஷத்திற்குள் நூற்றுக்கணக்கான கைதிகள் விடுதலை ஆகமுடியும். இதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், அவர்கள் எபபடி சிறையில் இருந்தார்களோ அதே போல எங்கள சார்பிலும் ஆண்டுக்கணக்காக சிறையில் இருந்தவர்கள் இருக்கிறார்கள. அதிலே நம்முடைய நண்பர் திரு. இராமநாதனுக்கு மிகுந்த அனுபவம் உண்டு. சிறைச்சாலையிலே அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு சமையல செய்து அங்கிருக்கின்றவர்களுக்கெல்லாம் சாப்பாடு வழங்கியிருக்கிறார்கள். எனவே அவருக்கு அதிக அனுபவம் உண்டு. இதிலே பிரச்சினை என்னவென்று சொன்னால் 433ஏ என்ற செக்ஷன் இப்போது கிரிமினல் புரொசீஜர் கோடிலே போடப்பட்டு இருக்கிறது. அந்த செக்ஷனின்படி அட்லீஸ்ட் 14 இயர்ஸ் ஆப் தி இம்பிரிசன்மெண்ட்—இந்த லீவுகள் எல்லாம் கழித்தாலும்கூட இந்த 14

ஆண்டுகள் இருக்க வேண்டும் என்ற விதிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே போல சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு ஜட்ஜ்மெண்ட்லே திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் இருந்த அந்த பெஞ்சிலே அதுபோல 14 ஆண்டுகள் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதனால் தான் சிக்கல. அது கூட இப்போது ஏற்படவில்லை. 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களைப் பற்றித்தான் பிரச்சினை. 1978-க்கு முன்னால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள $10\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பிறகு தான் அவர்களுடைய விடுதலையைப் பற்றி ஆலோசிக்கலாம் என்ற விதிமுறை இருக்கின்ற காரணத்தினால்தான் அப்படி செய்யப்படுகிறது. $10\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேல் அதைப்பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இப்போதும் முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை அடைந்திருக்கக்கூடிய கைதிகள் நீண்ட நாட்களாக சிறைகளிலே இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் தக்க தொழிற் பயிற்சியினை அவர்களுக்கு அளித்து, பல்வேறு தொழில் நிலைகளிலே அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து அவர்கள் வெளிவரும் காலங்களில் சிறந்த பயிற்சியாளர்களாக தொழில் துவங்கக்கூடிய நிலைமை உடையவர்களாக உருவாக்கக்கூடிய எண்ணம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது சில சிறைச்சாலைகளிலே இது போன்ற பயிற்சி அளிக்கப்படுகின்றது. அந்தப் பயிற்சியைப பெற்ற பிறகு வெளியே வந்து அவர்கள் தாங்களாக வேலையைத் துவக்க முடியுமா என்று என்னால் சொல்ல முடியாது. அவர்களுக்கு அங்கு கொடுக்கப்படுகின்ற பயிற்சி சாதாரணமான பயிற்சி. அந்தப் பயிற்சியைக் கொண்டு ஓரளவிற்குத்தான் தங்கள் வாழ்க்கையை அவர்கள் அமைத்துக் கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயுள தண்டனைக் கைதிகளை அந்தந்த மாவட்ட சிறையில் வைப்பது அவசியம் என்று அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். ஏனென்று சொன்னால் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவிப்பது என்பது ரொம்பக் கொடுமை. அவர்களுக்கும் மனைவி, குழந்தை, குடும்பம் என்று இருக்கும். அவர்களை ரொம்ப தூரத்தில் உள்ள சிறையில் வைத்தால், அவர்கள் குடும்பத்தினர் வந்து பார்க்க முடிவதில்லை. எனவே அவர்களை அந்தந்த ஊர் சிறையிலே வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை விதிக்கப்படக்கூடிய அந்த ஆயுள் கைதிகளை கூடுமானவரை அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற மத்திய சிறையில் அவர்கள் வைக்கப்படுகிறார்கள். சில ஆயுள் கைதிகள் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் போகின்ற நேரத்திலும் அடிக்கடி குற்றங்களைச் செய்து வருகின்றவர்களையும் வேறு சிறைக்கு மாற்றுகின்ற நிலைமை ஏற்படுகிற போதுதான் அப்படி ஏற்படுகின்றதே தவிர, திட்டமிட்டு செய்யக்கூடிய காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அண்ணாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய சிறைச்சாலைகளிலே ஆயுள் தண்டனை 14 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்றுக் கொண்டு சிறையிலே இருப்பவர்கள் எத்தனை பேர் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சிறைச் சாலைக்குச் சென்ற அனுபவம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே நான் குறிப்பிடுகின்றபோது சொன்னேன். 2,994 பேர் இப்போது சிறையில் இருக்கிறார்கள்.

(முற்பகல் 9.10)

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 14 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நிலை இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே 14 ஆண்டுகள் கழித்தவர்களுக்கு போர்டு என்று வைத்து அவர்கள் சிபாரிசு செய்கின்ற முறை இருக்கிறது. அந்த போர்டே சில சமயத்தில், காலத்தில் கூடுவது இல்லை என்ற ஒரு புகார் இருக்கிறதே, அந்த போர்டு காலாகாலத்தில் கூட, பரிசீலிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர்களைப் பொறுத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஏற்கெனவே அரசாங்கத்தின் ஆணைப்படி 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களை விடுதலை செய்திருக்கிறோம்.

14 ஆண்டுகள் ஆன பிறகு, அதை உடனடியாக கவனித்து, அரசாங்கத்திற்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்று தெரியப் படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற ஆலோசனைக் குழுக்கள் கூடுவதிலே காலதாமதம் ஏற்படுவது என்பது உண்மைதான். எனவே, அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் கைதிகளுடைய குடும்பங்களுக்கு நம்முடைய அரசின் சார்பில் ஏதேனும் பாதுகாப்பு நிதியை வழங்குகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர் களே, ஆயுள் கைதிகள் விடுதலை செய்யப்பட்டாலே, அதுவே ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சமீபத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்து வழக்குப் போடக்கூடாது என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. அதனால் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு காவல் துறைக்கு சிரமம் இருப்பதுபோக, குற்றங்கள் அதிகமாகப் பெருகி விடக்கூடிய அபாயமான சூழ்நிலை ஒன்றிருப்பதால், அந்த ஷரத்தைத் தவறாக காவல் துறை பயன்படுத்தாத அளவில் பார்த்துக்கொண்டு, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்தால்தான் பல குற்றங்கள் துலக்குவதற்கு எளிதாக இருக்கும் என்ற காரணத்தால் அது மறுபரிசீலனை செய்யப்படுமா என் பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர் களே, மூலக் கேள்வி ஆயுள் கைதிகளைப் பற்றியது. எப்படி உறுப்பினருக்கு சந்தேகம் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. சந்தேகக் கேஸ்கள் போடக் கூடாது என்று ஏற்கெனவே அரசு அறிவித்துவிட்டது. அதைப் பற்றி மறு பரிசீலனை செய்யும் நிலைமை என்னைப் பொறுத்து இல்லை. முதலமைச்சர் அவர் கள்தான் அதற்கு முடிவு செய்ய வேண்டும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் கைதிகள் இன்றையதினம் ஏறத்தாழ 3,000 பேர் இங்கே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களில் பெண் கைதிகள் யாரேனும் இருக்கிறார்களா? அப் படி இருந்தால், நம்முடைய சட்டமன்றத்தினுடைய பொன் விழா ஆண்டை ஒட்டி, அவர்களையெல்லாம் விடுதலை செய் வதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, பெண் கைதிகள் எவ்வளவு என்ற விவரம் இப்போது இல்லை. ஆனால் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்ட 120 பேரில் ஒரே ஒரு பெண்தான் இருந்தார். அதைப் பொறுத்தவரையில் பாராட்ட வேண்டியதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 210 முதல் 213 முடிய, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

பஸ் பயணிகளுக்கு காப்பீட்டு முறை.

214—(*வினா எண். 1748) திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களிலும், அரசு பஸ்களிலும் பயணம் செய்யும் பயணிகள் விபத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ''காப்பீட்டு'' முறை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய காப்பீட்டு முறை கொண்டுவருவது அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள்.

215—(*வினா எண். 3501) டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?